**கனம் சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை: திருமதி. R. கீதா, B.A.,B.L.,**
**சார்பு நீதிபதி, மானாமதுரை.**
**2024ம் வருடம் பிப்ரவரி மாதம் 12ம் நாள் திங்கட்கிழமை**
**IA 3/2022**
**in**
**OS 86/2022**

1. மீனாட்சி

2. பொன்னழகு

3. பரமேஸ்வரி

4. வீரமாகாளி

(வாதிகள் தங்களுக்காகவும், 02.06.1965ம்
தேதியிட்ட தர்மசெட்டில்மெண்ட் ஆவணத்தின்
படி டிரஸ்டிகள் ஸ்தானத்தில்) ..மனுதாரர்கள்/ வாதிகள்

/எதிர்/

1.ஜோதி மணிகண்டன்

2. பாப்பு

3. சத்யா

4. சங்கரேஸ்வரி

5. தொ. அழகர்

6. M. நடராஜன்

7. காந்திராணி

8. ரவிசந்திரன்

9. சிவகாமி

10. மாரிகண்ணன் ...எதிர்மனுதாரர்கள்/4 முதல் 13 வரை பிரதிவாதிகள்

இம்மனுவானது, இறுதி விசாரணைக்காக 29.01.2024ம் தேதி என் முன்னர் வந்தபோது மனுதார்கள்/வாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு. M. லிங்கேஸ்வரன்,

அவர்கள் முன்னிலையாகியும், 1,2,3,5 முதல் 9 எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு. M. கோபால், பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 4, 10 எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஒருதலைபட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்கள் கேட்டும், சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று (12.02.2024) இந்நீதிமன்றம் வழங்கலான

**உத்திரவு**

இம்மனுவானது, எதிர்மனுதாரர்கள் பெயர்களுக்கு மோசடியாக பதிவு செய்துள்ள கிரைய ஆவணங்களை வைத்துக்கொண்டு, பிறத்தியில் மூன்றாம் மனிதர்களுக்கு எவ்வித பந்தக பராதீனமோ, விற்க விலைக் கிரையங்களோ செய்யக் கூடாது என எதிர்மனுதார்கள்/4 முதல் 13 வரை பிரதிவாதிகள் மீது இம்மனு முடியும் வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளையும், இவ்வழக்கு முடியும் வரை ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளையும் வழங்கி உத்தரவிட வேண்டியும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39, விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151-ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதார்கள்/வாதிகள் தரப்பிலான மனு அபிடவிட்டின் சுருக்கம்:**

மனுதாரர்கள் தங்களது மனுவில், தாவா சொத்து என்பது தர்ம காரியங்கள் செய்வதற்காக தர்மசெட்டில்மெண்ட் மூலம் ஏற்படுத்தப்பட்ட சொத்து என்றும், புலியூர் கிராமத்தில் வசித்து வந்த இராமசாமியா பிள்ளை மகன் ஆறுமுகம் பிள்ளை-1, முத்திருளாண்டியா பிள்ளை குமாரர்கள் கருப்பையாபிள்ளை என்ற முத்துமாயாண்டிா பிள்ளை-1 (தனக்காகவும், தன் மைனர் மகன் ராமையாவுக்கு கார்டியனாகவும்) திரவியம்பிள்ளை என்ற இராமசாமியாபிள்ளை-2, (தனக்காகவும், தன் மைனர் மக்கள் முருகன் என்ற முத்திருளாண்டி-1, கந்தசாமி-2 ஆகிய இருவர்களுக்கு கார்டியனாக இருந்து மேற்படியார்களால் புலியூர் கிராமத்தில் தண்ணீர் பந்தல், பங்குனி பூஜை தர்மசெட்டில்மெண்ட் என்ற பெயரில் தாவாச் சொத்தை தர்ம காரியங்களுக்காக ஆவண எண். 470/1965 என்ற எண்ணில் 02.06.1965ம் தேதியில் மதுரை வடக்கு இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், தாவாச் சொத்தும் ராமசாமியாபிள்ளை, கந்தசாமியாபிள்ளை மற்றும் முத்திருளாண்டியாபிள்ளை ஆகிய இருவரும் சேர்ந்து

கடந்த 1930ம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் புலியூர் கிராமத்தில் உள்ள மேற்படியார்களின் குல தெய்வமான ஸ்ரீ சித்தர் கோவில் வைகாசி மாத பூஜை நடக்கும் மூன்று நாட்களும் தண்ணீர் பந்தல் வைத்து நீர் மோரும் பானகமும் சந்தனம் வெற்றிலைபாக்கும் எல்வோருக்கும் கொடுத்து தர்மம் நடத்தி வருவது என்றும், 2வது நாள் பூஜையின் போது அதாவது கப்பரை பூஜை அன்று ஸ்ரீ சித்தர் கோவிலுக்கு பொங்கலுக்கு அரிசி வகையறா சாமான்கள் கொடுத்தும், பதினெட்டாம்படி கருப்பண சாமியின் முன் கதவுகளுக்கு சந்தனம், புனுகு, ஜவ்வாது முதலிய வாசனைத்திரவியங்கள் சாத்தியும் பூ மலர் மாலைகளும், வடை மாலையும் பரிவட்டங்களும் சேர்ந்து கதவுகளை அலங்காரம் செய்து வருவதுடன் திருப்பரங்குன்றம் ஸ்ரீ ஆண்டவர் சுப்பரமணிய சுவாமிக்கு திருக்கல்யாணம் நடக்கும் தினத்தில் சுமார் 100 படி அரிசி வரையில் சமையல் செய்து சுப்பிரமணியசுவாமிக்கு பிரீத்தியாக பூஜை நடத்தி எல்லோருக்கும் அன்னதான தர்மம் நடத்தி வருகிறது என்றும், மேற்படி தர்ம காரியங்களை தங்களுக்குப் பின் தொடர்ந்து செய்து வரவேண்டும் என்றும், தாவாச் சொத்தை தனித்தோ, சேர்த்தோ எவ்வித பந்தக பராதீனங்களும் செய்வதற்கு பாத்தியதை கிடையாது என்றும், அப்படி மீறி எவ்வித பந்தக பராதீனங்களும் செய்தாலும், அது செல்லத்தக்கதில்லை என்றும், தர்மசெட்டில்மெண்ட்டும் மனுதார்களின் சொந்த பிரைவேட் குடும்ப நன்மையை உத்தேசித்து மனுதார்கள் எழுதிவைத்திருப்பதால் மேற்படி தர்ம டிரஸ்ட் பற்றி மற்ற யாருக்கும், சர்க்காருக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றும், சர்க்காரும் மேற்படி தர்மத்தின் கணக்கு முதலியவைகளை கேட்க பாத்தியம் இல்லை என்றும், தனித்து குறிப்பிட்டு மேற்படி தர்ம டிரஸ்டை ஏற்படுத்தி அதற்கு ஆதரவாக தர்ம செட்டில் ஆவணத்தையும் பதிவு செய்துள்ளதாகவும், மேற்படி தர்மசெட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைத்த நபர்களான முத்துமாயாண்டியாபிள்ளை வாரிசுகள் இவ்வழக்கில் கண்ட வாதிகள் என்றும், திரவியம்பிள்ளை என்ற ராமசாமியாபிள்ளையின் வாரிசுகள் இவ்வழக்கில் கண்ட 1 முதல் 3 வரை பிரதிவாதிகள் என்றும், ராமசாமிபிள்ளை மகன் ஆறுமுகம்பிள்ளை என்பவருக்கு யாதொரு வாரிசும் கிடையாது என்றும், மேற்கண்ட தர்மசெட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்திய கந்தசாமி மகன் முத்திருளாண்டி பிள்ளையின் வாரிசுகள் ஆன முத்துமாயாண்டி என்ற கருப்பையாவும், ராமசாமி என்ற திரவியம்பிள்ளையும் இறந்துவிட்டபடியால் மேற்படியார்களின் வாரிசுகளான

மனுதார்கள் உள்ளிட்ட 1 முதல் 3 வரை பிரதிவாதிகள் மேற்படி தர்மசெட்டில்மெண்ட் ஆவணத்தின்படி தாவாச் சொத்துக்களை தர்ம டிரஸ்டிக்காக நிர்வகித்தும் மேலே குறிப்பிட்ட தர்ம காரியங்களை செய்து வருவதாகவும், ராமசாமி மகன் ஆறுமுகம்பிள்ளை என்பவருக்கு எவ்வித வாரிசுகளும் இல்லாத நிலையில் இறந்துவிட்டதாகவும், மேற்படி தர்ம செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட சரத்துக்கு மீறிய வகையில் இவ்வழக்கில் கண்ட 1 முதல் 3 வரை பிரதிவாதிகளான முருகன் என்ற முத்திருளாண்டி, கந்தசாமி, கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்களால் எதிர்மனுதாரர்கள்/4 முதல் 13 வரை பிரதிவாதிகளுக்கு மதுரை வடக்குஇணை சார்பதிவாளர் எண்.1 அலுவலகத்தில் மனுதார்களுக்கு தெரியாத நிலையில் மோசடியாக கிரைய ஆவணங்களை பதிவு செய்து கொடுத்துள்ளதாகவும், அதன்படி 1ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதியான ஜோதிமணிகண்டனுக்கு தாவா சொத்தில் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 40 செண்டில் வடபகுதியான 5 செண்ட் நிலத்தை மதுரை வடக்கு இணை சார்பதிவாளர் எண்.1 அலுவலகத்தில் வைத்து ஆவண எண். 4241/2018 என்ற எண்ணில் 14.12.2018ம் தேதியில் ரூ.58,860/- க்கு பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் வாயிலாக மோசடி கிரையப் பத்திரத்தை பதிவு செய்து கொடுத்துள்ளதாகவும், அவ்விதம் பதிவு செய்து கொடுத்திட 1 முதல் 3 வரை பிரதிவாதிகளுக்கு யாதொரு உரிமையும் சட்டப்படி கிடையாது என்றும், மேற்படி 14.12.2018ம் தேதியிட்ட கிரைய ஆவணமும் மனுதாரர்களுக்கு தெரியாத நிலையிலும், மேற்படி தர்ம டிரஸ்ட் ஆவணத்தை ஏற்படுத்திய நபர்களில் ஒருவரான முத்துமாயாண்டிபிள்ளையின் வாரிசுகளான மனுதாரர்களை கட்டுப்படுத்தாமலும் பதிவு செய்துள்ளதால், மேற்படி மோசடி கிரைய ஆவணமும் சட்டப்படி செல்லுபடியாகக் கூடியதில்லை என்றும், மேலும் மேற்படி ஆவணத்தின் வாயிலாக மனுதாரர்களுக்கு தாவாச் சொத்தில் மேற்படி தர்ம டிரஸ்டின் மூலம் இருந்து வரும் உரிமையை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தக்கூடியதில்லை என்றும், அதேபோல் 2ம் எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதிக்கு 1 முதல் 3 வரை பிரதிவாதிகளால் தாவாச் சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 40 செண்டில் வடபுறத்தில் கிழமேல் வாய்க்காலை ஒட்டிய தென்புறம் பகுதியான 10 செண்டை 15ம் பிரதிவாதி அலுவலகத்தில்ஆவண எண். 4242/2018 என்ற எண்ணில் 14.12.2018ம் தேதியில் மோசடியாக பதிவுசெய்யப்பட்ட கிரையப்ப பத்திரத்தின் படி பதிவு செய்துகொடுத்துள்ளதாகவும், அதேபோல் 2ம் எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதியின்

பெயருக்கு 1 முதல் 3 வரை பிரதிவாதிகளால் மதுரை வடக்கு இணை சார்பதிவாளர் எண்.1 அலுவலகத்தில் ஆவண எண். 747/2019 என்ற எண்ணில் 06.03.2019ம் தேதியில் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 40 செண்டில் வடபுறம் 4ம் பிரதிவாதி கிரையம் பெற்ற 5 செண்டை நீக்கி ஒரு ஏக்கர் 35 செண்டில் கிழமேல் வாய்க்காலுக்கு அடுத்து தென்புறம் பகுதியான செண்ட் 70 உள்ள பாதரை நஞ்சை நிலம் நீக்கி, வடபுறம் பகுதியான 65 செண்டில் ஏற்கனவே 5ம் பிரதிவாதிக்கு 14.12.2018ல் ஆவண எண். 4242/2018 என்ற எண்ணில் கிரையம் செய்து கொடுத்துள்ள 10 செண்ட் நீக்கி மீதமுள்ள 55 செண்டில் தென்புறம் பகுதியான 5 செண்டை மோசடியாக மேற்படி 06.03.2019ல் பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரத்தின் வாயிலாக கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலும் மனுதார்கள் தங்களது மனுவில், அவ்விதம் பதிவுசெய்து கொடுத்திட 1 முதல் 3 வரை பிரதிவாதிகளுக்கு யாதொரு உரிமையும் சட்டப்படி கிடையாது என்றும், மேற்படி 14.12.2018 மற்றும் 06.03.2019ம் தேதியிட்ட மோசடி கிரைய ஆவணங்களும் மனுதாரர்களுக்குத் தெரியாத நிலையிலும் மேற்படி தர்ம டிரஸ்ட் ஆவணத்தை ஏற்படுத்திய நபர்களில் ஒருவரான முத்துமாயாண்டி பிள்ளையின் வாரிசுகளான மனுதார்களை கட்டுப்படுத்தாமலும் பதிவு செய்துள்ளதால், மேற்படி மோசடி கிரைய ஆவணமும் சட்டப்படி செல்லுபடியாகக் கூடியதில்லை என்றும், மேலும் மேற்படி ஆவணத்தின் வாயிலாக மனுதாரர்களுக்கு தாவாச் சொத்தில் மேற்படி தர்ம டிரஸ்டின் மூலம் இருந்து வரும் உரிமையை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தக்கூடியதில்லை என்றும், அதேபோல் 3ம் எதிர்மனுதாரர்/6ம் பிரதிவாதியான சத்யா என்பவர் பெயருக்கு 1 முதல் 3 வரை பிரதிவாதிகளால் மதுரை வடக்கு இணை சார்பதிவாளர் எண். 1 அலுவலகத்தில் ஆவண எண். 745/2019 என்ற எண்ணில் 06.03.2019ம் தேதியில் தாவாச் சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 40 செண்டில் வடபுறம் 4ம் பிரதிவாதி கிரையம் பெற்ற 5 செண்ட் நீக்கி ஒரு ஏக்கர் 35 செண்டில் கிழமேல் வாய்க்காலுக்கு அடுத்து தென்புறம் பகுதியான செண்ட் 70 உள்ள பாதரை நஞ்சை நிலம் நீக்கி, வடபுறம் பகுதியான 65 செண்டில் ஏற்கனவே 2ம் எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதிக்கு 14.12.2018ல் ஆவண எண்.4242/2018 என்ற எண்ணில் கிரையம் செய்து கொடுத்துள்ள 10 செண்ட் நீக்கி மீதமுள்ள 55 செண்டில் கீழ்புறத்தில் தென்புறம்

மையம் பகுதியான 3 செண்டை மோசடியாக மேற்படி 06.03.2019ல் பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரத்தின் வாயிலாக கிரையம்செய்து கொடுத்துள்ளதாகவும், அதேபோல் 4ம் எதிர்மனுதாரர்/7ம் பிரதிவாதியான சங்கரேஸ்வரி என்பவர் பெயருக்கு 1 முதல் 3 வரை பிரதிவாதிகளால் மதுரை வடக்கு இணை சார்பதிவாளர் எண். 1 அலுவலகத்தில் ஆவண எண். 746/2019 என்ற எண்ணில் 06.03.2019ம் தேதியில் தாவாச் சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 40 செண்டில் வடபுறம் 4ம் பிரதிவாதி கிரையம் பெற்ற 5 செண்ட் நீக்கி ஒரு ஏக்கர் 35 செண்டில் கிழமேல் வாய்க்காலுக்கு அடுத்து தென்புறம் பகுதியான செண்ட் 70 உள்ள பாதரை நஞ்சை நிலம் நீக்கி வடபுறம் பகுதியான 65 செண்டில் ஏற்கனவே 2ம் எதிர்மனுதாரர் 5ம் பிரதிவாதிக்கு 14.12.2018ல் ஆவண எண். 4242/2018 என்ற எண்ணில் கிரையம் செய்துகொடுத்துள்ள 10 செண்டை நீக்கி மீதமுள்ள 55 செண்டில் கீழ்புறத்தில் மையம் பகுதியான 3 செண்டை மோசடியாக மேற்படி 06.03.2019ல் பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரத்தின் வாயிலாக கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், இவ்வழக்கில் கண்ட 16, 17, 18, 19, 20ம் பிரதிவாதிகளுக்கு 12.08.2020ம் தேதியில் தாவா சொத்தில் பிளாட்டுகள் அமைக்க எவ்வித லேஅவுட்டும் வழங்க கூடாது என்றும், வருவாய்துறை மூலமாகவும், அனுமதி வழங்கக்கூடாது என்றும், ஏற்கனவே வழங்கியிருந்தால், அதனை ரத்து செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தி மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பும், அனுப்பப்பட்டது என்றும், அதனை 16, 17, 19ம் பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டு அஞ்சலக ஒப்புதல் அட்டையும் திரும்பி வரப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலும் மனுதார்கள் தங்களது மனுவில், 5ம் எதிர்மனுதாரர்/8ம் பிரதிவாதியான தொத்தன் மகன் அழகருக்கு 1ம் பிரதிவாதி மதுரை வடக்கு இணை சார்பதிவாளர் எண். 1 அலுவலகத்தில் ஆவண எண். 1133/2020 என்ற எண்ணில் 12.05.2020ம் தேதியில் வைத்து சப்டிவிசன் பட்டா எண். 334க்கு சர்வே எண். 144/4Bயில் கட்டுப்பட்ட 0.20.11 ஏர்ஸ்க்கு செண்ட் 50யில் வடபுறத்தில் கீழ்புறம் செண்ட் 15ல் கீழ்புறம் செண்ட் 6 ஐ மோசடியாக கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், அவ்விதம் செய்துகொடுக்க 1ம் பிரதிவாதிக்கு யாதொரு உரிமையும் தனித்து கிடையாது என்றும், மேற்படி ஆவண எண். 1133/2020 என்ற எண்ணில் கிரையப்பத்திரமும் சட்டப்படி செல்லுபடி ஆகக்கூடியதில்லை என்றும், மேற்படி

மோசடி கிரைய ஆவணத்தை மனுதாரர்களுக்கு டிரஸ்ட் சொத்தான தாவா சொத்தில் இருந்து வரக்கூடிய உரிமையும் நசிந்துபோக கூடியதில்லை என்றும், அதேபோல் 6ம் எதிர்மனுதாரர்/9ம் பிரதிவாதி நடராஜன் என்பவருக்கு வழக்கில் கண்ட 1ம் பிரதிவாதி 05.08.2020ம் தேதி ஆவண எண். 1848/2020 என்ற எண்ணில் தற்போதைய சப்டிவிசன் படி 1189 வது எண் பட்டாவில் கட்டுப்பட்ட சர்வே எண். 144/4Dயில் விஸ்தீரணம் 0.01.22 ஏர்ஸ்க்கு செண்ட் 3ஐ மோசடியாக கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், அவ்விதம் கிரையம் செய்து கொடுக்க 1ம் பிரதிவாதிக்கு யாதொரு உரிமையும் கிடையாது என்றும், மேற்படி ஆவண எண். 1848/2020 என்ற எண்ணில் கிரையப்பத்திரமும் சட்டப்படி செல்லுபடி ஆகக் கூடியதில்லை என்றும், மேற்படி மோசடி கிரைய ஆவணத்தை மனுதாரர்களுக்கு டிரஸ்ட் சொத்தான தாவா சொத்தில் இருந்து வரக்கூடிய உரிமையும் நசிந்துபோக கூடியதில்லை என்றும், அதேபோல் 7ம் எதிர்மனுதாரர்/10ம் பிரதிவாதி காந்திராணி என்பவருக்கு வழக்கில் கண்ட 2ம் பிரதிவாதி 05.08.2020ம் தேதி ஆவண எண். 1850/2020 என்ற எண்ணில் தற்போதைய சப்டிவிசன் படி 334வது எண் பட்டாவில் கட்டுப்பட்டா சர்வே எண். 144/4Bயில் விஸ்தீரணம் 0.20.11 ஏர்ஸ்க்கு செண்ட் 50ல் வடபுறத்தில் மேல்புறம் செண்ட் 15ல் மேல்புறத்தில் தென்புறம் செண்ட் 3 உள்ள நஞ்சை நிலத்தை மோசடியாக கிரையம்செய்து கொடுத்துள்ளதாகவும், அவ்விதம் கிரையம் செய்து கொடுக்க 2ம் பிரதிவாதிக்கு யாதொரு உரிமையும் கிடையாது என்றும், மேற்படி ஆவண எண். 1850/2020 என்ற எண்ணில் கிரையப்பத்திரமும் சட்டப்படி செல்லுபடி ஆகக்கூடியதில்லை என்றும், மேற்படி மோசடி கிரைய ஆவணத்தை மனுதாரர்களுக்கு டிரஸ்ட் சொத்தான தாவா சொத்தில் இருந்து வரக் கூடிய உரிமையும் நசிந்துபோக கூடியதில்லை என்றும், அதேபோல் 8ம் எதிர்மனுதாரர்/11ம் பிரதிவாதி ரவிசந்திரன் என்பவருக்கு வழக்கில் கண்ட 3ம் பிரதிவாதி 06.08.2020ம் தேதி ஆவண எண். 1859/2020 என்ற எண்ணில் தற்போதைய சப்டிவிசன் படி 334 வது எண் பட்டாவில் கட்டுப்பட்ட சர்வே எண். 144/4Bயில் விஸ்தீரணம் 0.20.11 ஏர்ஸ்க்கு செண்ட் 50ல் தென்புறம் பகுதியான செண்ட் 15ல் கீழ்புறம் பகுதியான செண்ட் 6 உள்ள நஞ்சை நிலத்தை மோசடியாக கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், அவ்விதம் கிரையம் செய்து கொடுக்க 3ம் பிரதிவாதிக்கு யாதொரு உரிமையும் கிடையாது என்றும், மேற்படி ஆவண எண்.

1859/2020 என்ற எண்ணில் கிரையப்பத்திரமும் சட்டப்படி செல்லுபடி ஆகக் கூடியதில்லை என்றும், மேற்படி மோசடி கிரைய ஆவணத்தை மனுதாரர்களுக்கு டிரஸ்ட் சொத்தான தாவா சொத்தில் இருந்து வரக்கூடிய உரிமையும் நசிந்துபோக கூடியதில்லை என்றும், அதேபோல் 9ம் எதிர்மனுதாரர்/12ம் பிரதிவாதி சிவகாமி என்பவருக்கு வழக்கில் கண்ட 1ம் பிரதிவாதி 06.08.2020ம் தேதி ஆவண எண். 1861/2020 என்ற எண்ணில் தற்போதைய சப்டிவிசன் படி 334 வது எண் பட்டாவில் கட்டுப்பட்ட சர்வே எண். 144/4Bயில் விஸ்தீரணம் 0.20.11 ஏர்ஸ்க்கு செண்ட் 50ல் வடபுறத்தில் கீழ்புறம் செண்ட் 15ல் மையம் செண்ட் 3 உள்ள நஞ்சை நிலத்தை மோசடியாக கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், அவ்விதம் கிரையம் செய்து கொடுக்க 1ம் பிரதிவாதிக்கு யாதொரு உரிமையும் கிடையாது என்றும், மேற்படி ஆவண எண். 1861/2020 என்ற எண்ணில் கிரையப்பத்திரமும் சட்டப்படி செல்லுபடி ஆகக்கூடியதில்லை என்றும், மேற்படி மோசடி கிரைய ஆவணத்தை மனுதாரர்களுக்கு டிரஸ்ட் சொத்தான தாவா சொத்தில் இருந்து வரக்கூடிய உரிமையும் நசிந்துபோக கூடியதில்லை என்றும், அதேபோல் 10ம் எதிர்மனுதாரர்/13ம் பிரதிவாதி மாரிகண்ணன் என்பவருக்கு வழக்கில் கண்ட 3ம் பிரதிவாதி 23.12.2021ம் தேதி ஆவண எண். 4889/2021 என்ற எண்ணில் தற்போதைய சப்டிவிசன் படி 334 வது எண் பட்டாவில் கட்டுப்பட்ட சர்வே எண். 144/3Bயில் விஸ்தீரணம் 0.20.11 ஏர்ஸ்க்கு செண்ட் 50ல் வடபுறத்தில் கீழ்புறம் செண்ட் 15ல் மையம் செண்ட் 3 உள்ள நஞ்சை நிலத்தை மோசடியாக கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், அவ்விதம் கிரையம் செய்து கொடுக்க 3ம் பிரதிவாதிக்கு யாதொரு உரிமையும் கிடையாது என்றும், மேற்படி ஆவண எண். 4889/2021 என்ற எண்ணில் கிரையப்பத்திரமும் சட்டப்படி செல்லுபடி ஆகக் கூடியதில்லை என்றும், மேற்படி மோசடி கிரைய ஆவணத்தை மனுதாரர்களுக்கு டிரஸ்ட் சொத்தான தாவா சொத்தில் இருந்து வரக்கூடிய உரிமையும் நசிந்துபோக கூடியதில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும் மனுதார்கள் தங்களது மனுவில், மனுதாரர்களால் 16, 17 மற்றும் 19, 20 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை பொறுத்து பிளாட்டுகள் ஏற்படுத்துவதற்கான தடையின்மை சான்றும், வருவாய்துறை மூலமாகவோ, ஊராட்சி மன்றத்தின் மூலமாகவோ வழங்கக்கூடாது என 12.08.2020ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பும்,

அனுப்பப்பட்டுள்ளதாகவும், மேற்படி அறிவிப்பினை 16, 17 மற்றும் 19 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டு அஞ்சலக ஒப்புதல் அட்டையும் திரும்பி வரப்பட்டுள்ளது என்றும், மதுரை வடக்கு, மாவட்ட பதிவாளருக்கும் இவ்வழக்கில் கண்ட 15ம் பிரதிவாதிக்கும் மேற்படி 1 முதல் 3 வரை பிரதிவாதிகளால் தாவா சொத்தை பொறுத்து, 3ம் மனிதர்களுக்கு எவ்வித பந்தக பராதீனம் செய்ய நேரிட்டால் எவ்வித பத்திரப்பதிவுகளும் செய்யக்கூடாது என வலியுறுத்தியும், ஏற்கனவே 16, 17 மற்றும் 19, 20 பிரதிவாதிகளுக்கு அனுப்பியுள்ள அறிவிப்பையும், அதன் படி 19ம் பிரதிவாதி 20ம் பிரதிவாதிக்கு ந.க.பி3/870/2020 நாள்: 26.08.2020 என்ற எண்ணில் பட்டா எண் 334ல் கட்டுப்பட்ட தாவா சொத்துக்களில் எவ்வித பிளாட் அப்ரூவலும், கட்டிட வரைபட அனுமதியும், வழங்க வேண்டாம் என கேட்டுக்கொண்டு அனுப்பிய கடிதத்தை குறிப்பிட்டும் 05.09.2020ம் தேதி மனுதாரர்களால் வழக்கறிஞர் அறிவிப்பும் அனுப்பப்பட்டுள்ளது என்றும், மேற்படி மோசடி கிரைய பதிவுகளும் மனுதாரர்களுக்கு கடந்த 29.09.2020ம் தேதிதான் தெரிய வந்ததாகவும், மேற்படி மோசடி கிரையங்களும் தாவாச் சொத்தின் நிலையைப் பொறுத்து அறிந்து கொள்ள சார்பதிவக இணையதளத்தின் வாயிலாக வில்லங்கச் சான்றிதழை பெறும் போது தான் மனுதாரர்களுக்கு தெரிய வந்ததாகவும், உடனடியாக வழக்கறிஞர் அறிவிப்புகளை அனுப்பியும், தாவா வழக்கில் 1 முதல் 3 வரை பிரதிவாதிகளால் மோசடியாக 4 முதல் 13 வரை பிரதிவாதிகளுக்கு பதிவு செய்து கொடுத்துள்ள மேற்படி கிரையப் பத்திரங்களை பொறுத்து செல்லாநிலை(Null and Void) ஆவணம் என அறிவிக்கவும், பரிகாரம் கோரப்பட்டுள்ளதாகவும், எதிர்மனுதார்கள்/4 முதல் 13 வரை பிரதிவாதிகளும் பணபலம், ஆள்பலம்மிக்கவர்கள் என்றும், சட்டத்தை மதிக்காதவர்கள் என்றும், எச்செயலையும் துணிந்து செய்யக்கூடிய நபர்கள் என்றும், மனுதாரர்களால் எதிர்மனுதார்கள்/4 முதல் 13 வரை பிரதிவாதிகளின் அக்கிரம செய்கையை தடுத்து நிறுத்த இயலவில்லை என்றும், சமூகம் நீதிமன்ற தடை உத்தரவுகள் மூலமே தடை செய்ய முடியும் என்றும், சமன்சீர் சாத்திய படிமான கூறுகளும், மனுதாரர்கள் பக்கமே உள்ளது என்றும், ஆகவே எதிர்மனுதாரர்கள் பெயர்களுக்கு மோசடியாக பதிவு செய்துள்ள கிரைய ஆவணங்களை வைத்துக்கொண்டு, பிறத்தியில் மூன்றாம் மனிதர்களுக்கு எவ்வித பந்தக பராதீனமோ, விற்க விலைக் கிரையங்களோ செய்யக்கூடாது என

எதிர்மனுதார்கள்/4 முதல் 13 வரை பிரதிவாதிகள் மீது இம்மனு முடியும் வரை ஒரு இடைக்கால் உறுத்துக்கட்டளையும், இவ்வழக்கு முடியும் வரை ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளையும், வழங்கி உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 1, 2, 3, 5 முதல் 10 எதிர்மனுதார்கள்/4, 5, 6, 8 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பிலான எதிர்உரையின் சுருக்கம்:**

எதிர்மனுதார்கள் தனது எதிர்உரையில், தாவா மனுவையும் Trust Act, Section 28 - ன்படி மனுதாரர்கள்/வாதிகள் தங்களுக்காகவும் 02.06.1965-ந் தேதியிட்ட தர்ம செட்டில் மெண்ட் ஆவணத்தின்படி டிரஸ்டிகளாக இருந்து தாவா மனுவை சட்டப்படி தாக்கல் செய்வதற்கு மனுதாரர்கள்/வாதிகளுக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்றும் மேலும் குறிப்பாக மனுதாரர்கள்/வாதிகள் தாவா டிரஸ்டிற்கு எந்த நிலையிலும் தாவா மனுவை தாக்கல் செய்வதற்கு சட்டப்படி உரிமையில்லை என்றும் தாவா மனுவில் மனுதாரர்கள்/வாதிகள் தங்களுக்காகவும் 02.06.1965ம் தேதியிட்ட தர்மசெட்டில்மெண்ட் ஆவணத்தின்படி டிரஸ்டிகள் ஸ்தானத்தில் தாவா மனுவை தாவா சொத்திற்காக தாக்கல் செய்வதற்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்றும், தாவா மனுவில் கண்டதுபோல மனுதாரர்கள்/வாதிகள் பிரஸ்தாபிக்கும் சங்கதிகள் போல 02.06.1965ம் தேதியிட்ட தர்மசெட்டில்மெண்ட் ஆவணத்திற்கும், மனுதாரர்கள்/வாதிகளுக்கும் எந்தவிதமான நிலையிலும் டிரஸ்டிகளாக இருந்ததும் இல்லை என்றும், இந்நிலையில் தாவா மனுவை டிரஸ்டிகள் ஸ்தானத்தில் தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைநிற்கக் கூடியதில்லை என்றும், அதனால் தாவா வழக்கில் கண்ட 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு மனுதாரர்கள்/வாதிகள் பிரஸ்தாபிக்கும் டிரஸ்ட் சம்பந்தமான முழு உரிமையும், அனுபவமும், மேலும் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஆண் வாரிசுகளாக இருப்பதால் 02.06.1965ம் தேதியிட்ட தர்ம செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி டிரஸ்டு சம்பந்தமான காரியங்களை செய்வதற்கு முழு உரிமையும் இந்த வழக்கில் கண்ட 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு மட்டும் சித்தித்துள்ளது என 02.06.1965ம் தேதியிட்ட தர்ம செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டிருக்கிறது என்றும், தாவா டிரஸ்ட் சம்பந்தமான சகல காரியங்களையும் நடத்தி வர அதாவது புலியூர் கிராமத்திலுள்ள 1 முதல் 3 பிரதிவாதிகளின் குல தெய்வமான ஸ்ரீ சித்தர் கோவில் வைகாசி மாத பூஜை நடக்கும் மூன்று நாட்களும் தண்ணீர் பந்தல் வைத்து நீர் மோரும், பானகமும், சந்தனம், வெற்றிலை பாக்கு எல்லோருக்கும்

கொடுத்து மேலும் இரண்டாம் நாள் பூஜையின் போது ஸ்ரீ சித்தர் கோவிலுக்கு பொங்கல் அரிசி வகையறா சாமான்கள் கொடுத்தும், பதினெட்டாம்படி கருப்பண சாமியின் முன் கதவுகளுக்கு மாலை, வடமலை, பரிவட்டங்களும் சேர்த்து கதவு அலங்காரம் செய்தும் திருப்பரங்குன்றம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு திருக்கல்யாணம் நடக்கும் தினத்தில் அன்னதானம் தர்மம் செய்தும் சகல காரியங்களையும் 1 முதல் 3 பிரதிவாதிகள் 02.06.1965ம் தேதியிட்ட தர்மசெட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட ஷரத்துக்களின்படி செய்தும், மேலும் குறிப்பாக 1 முதல் 3 பிரதிவாதிகள் ஆண் வாரிசுகளாக இருந்து மேற்படி 02.06.1965ம் தேதியிட்ட தர்ம செட்டில்மெண்ட்ஆவணத்தின்படி செயல்பட்டு வருவதை தாவா மனுவில் கண்ட மனுதாரர்கள்/வாதிகள் ஒப்புக்கொண்டு தாவா மனுவை தாக்கல் செய்திருப்பதாலும், மேலும் குறிப்பாக மனுதாரர்கள்/வாதிகள் தாவா மனுவைத் தாக்கல் செய்திருப்பதைப் போல மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அசல் வழக்கு எண். 101/2010 ஆகக் கண்டும், அதன் மீது சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண். 74/2012 ஆகக் கண்டும் மனுதாரர்கள்/வாதிகள் வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு சாதகமாக தீர்ப்பாகி இருக்கின்ற நிலையில் தாவா மனுவும் முன்தீர்ப்பு தடையின் கீழ் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், ஆகையால் மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவா மனுவை எதிர்மனுதாரர்கள் தரப்பு செலவு தொகை சகிதம் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**4)** மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் சாட்சிய, சான்றாவணங்கள் இல்லை. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5)** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**6) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:**

கேள்வி:

1) இம்மனு அனுமதிக்கதக்கதா?

**7)** மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுச்சொத்தான சர்வே எண் 144/4ல் கண்ட ஏக்கர்1 செண்ட் 40 மனுதாரர்கள்/வாதிகள் டிரஸ்டிகளாக உள்ள 02.06.1965 தேதிய தர்மசெட்டில்மெண்ட ஆவணப்படியான தனிப்பட்ட டிரஸ்ட்டுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் மனுச்சொத்து பொறுத்து 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள், 4 முதல் 13 எதிர்மனுதாரர்கள் பெயரில் மோசடியாக கிரைய ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ளனர் என்றும், எனவே அசல் வழக்கின் மனுச்சொத்து மனுதாரர்கள்/வாதிகள் டிரஸ்டியாக இருந்து வரும் தனியார் டிரஸ்ட் பாத்தியப்பட்ட சொத்து என விளம்புகை பரிகாரமும் அதனை தொடர்நது மனுச்சொத்துக்களில் 4 முதல் 13 எதிர்மனுதாரர்கள் மோசடி கிரைய ஆவணங்கள் மூலம் சுவாதீனம் எடுத்திருப்பின் சுவாதீனம் மீட்டடைவு பரிகாரம் வேண்டியும் மனுச்சொத்துக்கள் பொறுத்து 4 முதல் 13 எதிர்மனுதாரர்கள் பெற்ற கிரையம் இல்லாநிலையது என்ற விளம்புகை பரிகாரம் வேண்டி அசல் வழக்கு தாக்கல் செய்ததாகவும், இந்த நிலையில் மனுச்சொத்தக்களை பொறுத்து எதிர்மனுதாரர்கள் வில்லங்கம் ஏற்படுத்த முயன்று வருகிறார்கள் என்றும், எனவே மனுச்சொத்துக்களை பொறுத்து எதிர்மனுதாரர்கள் இனிமேற்கொண்ட வில்லங்கம் ஏதும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வகையில் எதிர்மனுதாரர்களை கட்டுப்படுத்தி இடைக்கால உறுத்துக்கட்டளை வேண்டியுள்ளனர்.

**8)** எதிர்மனுதாரர் தரப்பு வழக்கினை டிரஸ்டி ஸ்தானத்தில் தாக்கல் செய்ய மனுதாரர்களுக்கு உரிமையில்லை என்றும், மனுச்சொத்து தொடர்பான 02.06.1965 தேதிய தர்மசெட்டில்மெண்ட் ஆவணப்படி மனுதாரர்கள் டிரஸ்டி அல்ல என்றும், மனுச்சொத்துக்கள் தற்போது டிரஸ்டி என்ற அடிப்படையில் 1, 2, 3 எதிர்மனுதாரர்கள் 02.06.1965 தேதிய தர்மசெட்டில்மெண்ட் பத்திரப்படி மனுச்சொத்தை நிர்வகித்து வருகின்றனர் என்பதாகும்.

**9)** மனுச்சொத்துக்களை 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் டிரஸ்ட்டியாக இருந்து நிர்வகித்து வர உரிமையுள்ளதா, மனுச்சொத்துக்கள் தொடர்பாக 02.06.1965 தேதிய தர்மசெட்டில்மெண்ட் ஆவண அடிப்படையில் டிரஸ்டி ஸ்தானத்தில் வழக்கிட மனுதாரர்களுக்கு உரிமையுள்ளதா, மனுச்சொத்துக்கள் பொறுத்து 4 முதல் 13 பிரதிவாதிகள் பெயரிலான கிரைய ஆவணங்கள் செல்லுதன்மை குறித்து

இம்மனுவில் தீர்மானிக்ககூடிய உரிமையில்லை. அவை குறித்து அசல் வழக்கில் தீர்மானிக்ககூடிய ஒன்றாகும்.

**10)** இம்மனுவில் தீர்வு காண வேண்டிய விபரம் யாதெனில் உ.ந.சட்டம் கட்டளை 39 விதி 1ன் கீழான சூழ்நிலை உள்ளதா என்பதை அறிய வேண்டும். மனு அபிடவிட்டில் எதிர்மனுதாரர் வழக்கிற்கு பின்னர் வில்லங்கம் ஏற்படுத்த முயன்று வருகின்றனர் என்பதை காட்ட மனுதாரர் தரப்பில் சாட்சி சான்றாவணம் எதுவும் இல்லை. எதிர்மனுதாரர்கள் வில்லங்கம் ஏற்படுத்த முயன்று வருகின்றனர் என்ற மனுதாரர்களின் மன பயத்தின் அடிப்படையில் உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க இயலாது. மேலும் வழக்கு நிலுவையின் போது எதிர்மனுதாரர்கள் வில்லங்கம் ஏற்படுத்தினால் அவை Lispentens என்ற கோட்பாட்டின் படி பாதிக்கப்பட்டு வில்லங்கம் செய்யும் நபர்கள அசல் வழக்க தீர்வுக்கு கட்டுப்படக்கூடியவர்கள் ஆவர்.

**11)** மேற்கண்ட பரிசீலனை அடிப்படையில் உ.ந.சட்டம் கட்டளை 39 விதி 1ன் கீழ் சூழ்நிலை உள்ளதாக மனு அபிடவிட்டின் மூலம் உளதேர்வு இல்லாததாகவும் சாட்சி சான்றாவணங்கள் இல்லாததாலும் மனுவில் கோரியவாறு தாவா சொத்தை பொறுத்து மனுதாரர்கள்/வாதிகளுக்கு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கலாகாது என தீர்மானிக்கிறது.

முடிவாக இம்மனு தள்ளுபடி செய்து உத்திரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்திரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, என் முன்னிலையில் கணினியில் அடிக்கப்பட்டு, பின் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு பிப்ரவரி 12ம் நாளான இன்று என்னால் இந்த தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

**சார்பு நீதிபதி,**
**மானாமதுரை.**

மனுதார்கள்/வாதிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்: இல்லை

**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:**

| | |
|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 28.11.2011 தேதிய மானாமதுரை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மு.வ.எண்.101/2010 வழங்கப்பட்ட தீர்ப்புரை - சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 28.11.2011 தேதிய மானாமதுரை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மு.வ.எண்.101/2010 வழங்கப்பட்ட தீர்ப்பாணை - சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 05.09.2014 தேதிய சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் A.S.No.74/2012 ல் வழங்கப்பட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.4 | 05.09.2014 தேதிய சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் A.S.No.74/2012 ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |

**சார்பு நீதிபதி,**
**மானாமதுரை.**